மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன், சொல்லுங்கள். உரையை முடியுங்கள். நேரம் ஆகிறது.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய நல்ல அறிவிப்பிற்கு திருத்தணி தொகுதி மக்கள் சார்பில் மீண்டும் ஒரு முறை நன்றி கலந்த வணக்கத்தையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருத்தணி தொகுதியில் திருத்தணி, பள்ளிப்பட்டு மற்றும் ஆர்.கே. பேட்டை ஆகிய 3 முழு ஒன்றியங்கள் இருக்கின்றன. தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 3 ஒன்றியங்களுக்கும் தனித் தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அம்மாவின் அரசு நிறைவேற்றி வைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூ.110 கோடி நிதி இந்த ஆண்டே ஒதுக்கப்படுமா என்று கோரிக்கை வைத்தார்கள். அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கிறேன். அதேபோல், மற்ற ஒன்றியங்கள் குறித்து புதிதாக ஒரு கோரிக்கையை வைக்கிறார். அதற்கான நிதி ஆதார சூழ்நிலையைப் பொறுத்து, கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதனை அம்மா அவர்களின் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், அரசு தலைமைக் கொறடா மற்றும் மனுக்கள் குழுவினுடைய தலைவர் அவர்கள்.

2018 ஜூன் 14]

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2016–2018 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது (பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு சமர்ப்பிக்கின்றேன்.*

8. அறிவிப்பு

சட்டமன்ற செய்தியாளர்களுக்குப் பேனா மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செய்தியாளர்கள் மாட அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பெற்றுள்ள செய்தியாளர்கள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் வழங்கப்பெறும் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமுன்வடிவு பிரிவு–2–லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.*

9. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018–2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை.* *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்,*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான் தோன்றி, வழி தோன்றி, ஒளியும் தோன்றி, ஊன் தோன்றி, உயிர் தோன்றி, உடலும் தோன்றி, நீர் தோன்றி, நிலம் தோன்றி, நெருப்பும் தோன்றி, வளரும் இந்த உலகினில், 'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்னும் குறள்*